மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, கோயம்புத்தூரில் பத்திரிகையில் படித்தேன்; பாம்பு ஒன்றுக்கு அறுவை சிகிச்சை செய்தார்கள், அந்தப் பாம்பினுடைய நிலை என்னவென்று கேட்டார்கள். அது என்ன பாம்பு என்றும் கேட்டார்கள். அது சாரைப் பாம்பு. அது தீவிர சிகிச்சைக்குப் பிறகு உயிருடன் உள்ளது. உடலிலிருந்த கட்டிகளெல்லாம் அறுவை சிகிச்சை மூலமாக அகற்றப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த பாம்பைப் பார்க்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஏற்பாடு செய்ய தயாராக இருக்கிறேன் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

148—

கொய்யா பதப்படுத்தும் தொழிற்சாலை

***32397—திருமதி ப. சத்யா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதியில் கொய்யா பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பண்ருட்டி தொகுதியில் கொய்யா பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஜூலை 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

திருமதி ப. சத்யா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தாரகை அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். தியாகி திரு. எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார் அவர்களது திருவுருவப் படத்தினை இன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் திறந்து வைக்க இருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அண்ணன் அவர்களுக்கு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களின் சார்பாகவும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களின் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும், கிழக்கு மாவட்டச் செயலாளர் திரு. அருண்மொழித்தேவன் அண்ணன் அவர்களின் சார்பாகவும் எங்களது பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

விண் தொட்ட வெற்றிகளை ஈட்டி, மாற்றோரும் போற்றுகின்ற மதிநுட்ப ஆட்சியை நாட்டிற்கு அளித்திட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா, எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன்.

முற்பகல் 10-55

எனது பண்ருட்டி தொகுதியில் அதிக அளவில் பயிரிடப்படும் கொய்யாவைக் கொண்டு பல்வேறு உபபொருட்களைத் தயாரிக்க ஏதுவாக, அப்பகுதிவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையில், கொய்யா பதப்படுத்தும் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் கொய்யா 731 எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, 6,344 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. பண்ருட்டி தொகுதியில் 98 எக்டரில் கொய்யா பயிரிடப்பட்டு, 850 மெட்ரிக் டன் அளவிற்கு*

உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு விளைவிக்கப்படும் கொய்யா, கடலூர் மாவட்டத்திலுள்ள கடலூர், பண்ருட்டி, விருத்தாசலம், சிதம்பரம் மற்றும் வடலூரிலுள்ள 5 உழவர் சந்தைகளிலும், உள்ளூர் சந்தைகளிலும் மற்றும் நெடுஞ்சாலைகளில் நுகர்வோர் பயன்பாட்டிற்கும் விற்பனை செய்யப்படுகிறது.

பண்ருட்டி தொகுதியில் கொய்யா பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கும் அளவிற்கு கொய்யா உற்பத்தி செய்யப்படுவதில்லை என்பதால், பண்ருட்டி தொகுதியில் கொய்யா பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்ற காரணத்தை நான் முன்பே தெரிவித்தேன். ஆனால், பண்ருட்டி தொகுதியில் கொய்யா பதப்படுத்தும் தொழிற்சாலை அமைப்பது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையிலும், தேவையின் அடிப்படையிலும், இதுகுறித்த சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.

திருமதி ப. சத்யா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விதி 110-ன்கீழ் பல்வேறு திட்டங்களை மக்களுக்குத் தருகின்ற ஐயா எடப்பாடியார் அவர்களின் அரசு, விவசாயிகள் நிறைந்த பண்ருட்டி தொகுதியில் மரவள்ளிக்கிழங்கைப் பயன்படுத்தி பல்வேறு உணவுப் பொருட்களைத் தயாரிக்கும் ஆலை ஒன்றினை அமைத்துத் தருவதற்கு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சற்று நேரத்திற்கு முன்னர்

2019 ஜுலை 19]

சொன்னதுபோல, கொய்யா நாளொன்றுக்கு 32 டன்னிலிருந்து 40 டன் அளவிற்குத் தேவைப்படுகிறது. அந்த அளவிற்கு கொய்யா உற்பத்தி செய்யப்பட்டால்தான், கொய்யா பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கப்படும். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பண்ருட்டி தொகுதியில் மரவள்ளிக்கிழங்கு தொழிற்சாலை ஒன்றினை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதனை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, தேவையிருப்பின் அது ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

149—

வீட்டுமனைப் பட்டா

***26797—திரு. உ. மதிவாணன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், அகலகண் ஊராட்சி, மேல்பாதி கிராமத்தில் விடுபட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் வட்டம், அகலகண் கிராமம், மேல்பாதி தெருவில் 93 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அருள்மிகு கைலாசநாதர் கோயில் மற்றும் அருள்மிகு நேத்திரபுரீஸ்வரர் கோயில் இடங்களில் ஆக்கிரமிப்புமூலம் குடியிருந்து வரும் 21 நபர்களுக்கு வரன்முறை செய்து, வீட்டுமனைப் பட்டா வழங்குவது தொடர்பாக, இந்து சமய அறநிலையத் துறைக்கு நிலமதிப்பு